III.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Recognition of trade unions

* 1 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any draft Bill for according recognition to trade unions was placed before the Labour Advisory Board during 1956; and

(*b*) when the Bill would be introduced in the Assembly?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government are re-examining the question and will again consult the Labour Advisory Board.

Sri M. KALYANASUNDARAM : சர்க்கார் மறுபடியும் பரிசீலனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதனுடைய அர்த்தம். கொண்டுவருவதற்குப் பரிசீலனையா கொண்டுவராமல் நிறுத்தி வைப்பதற்காகப் பரிசீலனையா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : கொண்டுவருவது நன்மையா தீமையா என்பது பற்றித்தான் பரிசீலனை.

Sri S. PAKKIRISWAMI PILLAI : இந்த விஷயத்தில் மத்திய அரசாங்க தொழிலமைச்சருக்கும் ராஜ்ய அரசாங்க தொழிலமைச்சருக்கும் மன வேறுபாடு உண்டா ? அப்படியிருந்தால் எந்த விஷயத்தில் மன வேறுபாடு இருக்கிறது ? அதே சமயத்தில் இதற்கு முன்னாலிருந்த மந்திரியவர்களுக்கும் இப்பொழுதிருக்கிற மந்திரியவர்களுக்கும் இந்த விஷயத்தில் எந்த வழியில் வேறுபாடு இருக்கிறது என்பதை விளக்க முடியுமா ?

Mr. SPEAKER : I would suggest to the hon. Member not to put questions of an embarrassing nature such as asking the Hon. Minister's opinion about the views of other Ministers, or former Ministers. The present Minister is responsible for his views and the views of the present Government. Therefore I disallow the hon. Member's supplementary question.

Sri S. B. ADITYAN : ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்ற கொள்கையைக் கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்பதற்கு பல அர்த்தங்கள் உண்டு. அதாவது ஒரு தொழிலுக்கு ஒரே தொழிற் சங்கம்தான் இருக்கவேண்டும். வேறு தொழிற் சங்கங்கள் வைக்கக் கூடாதென்று சொன்னால் அது நமது கான்ஸ்டிட்யூஷனுக்குப் புறம்பாகும். ஒரு தொழிலில் ஒரு தொழிற்சங்கம் எந்த ஏற்பாட்டைச் செய்தாலும் அது "கலெக்ட்டிவ் பார்கெயினிங்" காகும். அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் அதில் பல சங்கடமான பிரச்னைகள் இருக்கலாம். அதனால் சர்க்கார் இதை மீண்டும் புனர் பரிசீலனை செய்கிறார்கள் என்று சொன்னேன்.

Sri M. KALYANASUNDARAM : இந்தச் சட்டத்தின் நோக்கம் ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் அமைத்து விட்டு மற்றவைகளை தடை செய்வதல்ல. அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் கிடையாது. எத்தனை

3rd May 1957]

சங்கங்கள் வேண்டுமானுல் இயங்கலாம். ஆனுல் சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். இதனுல் தீமை யிருக்கும் என்று கருதவில்லை. நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து ஆலோசனை செய்த பிறகுதான் கொண்டுவரப்பட்டதென்று கருதுகிறேன். மீண்டும் புனர் பரிசீலனை பண்ணவேண்டியது அவசியமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதெல்லாம் ஆர்குமெண்ட்ஸ். இவைகளெல்லாம் கவனிக்கப்படும்.

Sri A. GOVINDASAMY NAYAGAR : தொழிற் சங்கத்தை தொழிலாளர்களே நடத்த வேண்டுமென்று ஒரு முடிவை அரசாங்கம் வலியுறுத்துமா? தொழிற்சங்கத்தை பலதரப்பட்ட கட்சிகள் நடத்திச் செல்வதால் அவர்களின் கட்சி நலனுக்கு தொழிலாளர்களை அழைத்துக் செல்லப்படுகிறதைத் தடுப்பதற்கு, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்கவேண்டுமென்று வரும்போது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு அந்தத் தொழிற்சங்கம் போகாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் இரண்டு பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும் என்பது. இரண்டாவதாக, வெளியார்கள் தொழிற் சங்கங்களில் ஈடுபடலாமா என்பது, இரண்டாவதற்கு, இந்திய தொழில் சங்கச் சட்டப்படி வெளியார்கள், எக்ஸிக்யூட்டிவ் கமிட்டியில் பாதிவரை இருக்கலாமென்ற ஒரு ஷரத்திருக்கிறது. அது இருக்கும் வரையில் வெளியார்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

Sri M. P. SUBRAMANIAM : ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் தேவையா இல்லையா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கும்போது சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள், அந்தக் கருத்திற்கு நான் உடன்படவில்லை யென்று வெளிப்படையாகக் கூறிவிட்டால் அதனுல் அந்த முடிவு பாதிக்கப்படும் என்பது உண்மை அல்லவா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அந்த விதமாக எந்தக் கருத்தையும் இப்பொழுது சொன்னதாகத் தெரியவில்லை. பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னுல் எல்லாக் கருத்துக்களும் பரிசீலனை செய்யப்படும் என்று பொருள்.

Sri M. KALYANASUNDARAM : புனர் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னதாக சர்க்கார் மீண்டும் இந்த நகல் மசோதாவை லேபர் அட்வைஸரி போர்டுக்கு அனுப்பி, சர்க்காரின் புது யோசனைகளை அனுப்பி அவர்களது ஆலோசனையைக் கேட்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த சப்ளிமெண்டரியைக் கேட்பார்கள் என்று தெரிந்துதான் என்னுடைய முதல் பதிலிலேயே 'லேபர் அட்வைஸரி போர்டிடம் மறுபடியும் கலந்துகொள்வோம்' என்று சொன்னேன்.

Border dispute

* 2 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the stage at which the arbitration by Sri Pataskar in settling the border dispute between Andhra and Madras Governmentss tands?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sri H. V. Pataskar, who was deputed by the Central Government to bring about a settlement of the Andhra-Madras border dispute, visited Madras in December 1956 when a memorandum was presented to him on behalf of this Government. Sri Pataskar indicated that he would be meeting the